ஏப்ரல் 14, 2020

அன்பான பெற்றோர்களே மற்றும் பாதுகாவலர்களே,

ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபையின் தொலைதூரக் கற்றலில் நாங்கள் இரண்டாவது வாரத்தில் நுழையும்போது, நேருக்கு நேரான கல்வி கற்றலிலிருந்து தொலைதூரக் கற்றல் நிலைக்கு மாறுவதில் மாணவர்கள் மற்றும் கல்வி பயிற்றுநர்களுக்கு நாங்கள் உதவுவதுடன், உங்களுடைய பங்காண்மைக்கும் பொறுமைக்கும் நான் நன்றி கூற விரும்புகின்றேன்.

முன்னர் குறிப்பிட்டவாறு, மே 4 ஆம் திகதி மாணவர்கள் பாடசாலைக்குத் திரும்பமாட்டார்கள் என முதல்வர் Doug Ford இன்று அறிவித்ததை உங்களில் பலர் அனேகமாகக் கேட்டிருக்கலாம். பாடசாலை ஆண்டு இரத்துச் செய்யப்படுகின்றது என்பது இதன் அர்த்தம் அல்ல எனவும் எதிர்வரும் நாட்களில் கல்வி அமைச்சர் மேலும் விபரங்களை வழங்குவார் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார். இதுபற்றி மேலும் நாங்கள் அறியும்போதும் பகிர்ந்து கொள்ள மேலும் விபரங்கள் இருக்கும்போதும், அவற்றை நாங்கள் அறியத்தருவோம்.

குடும்பத்தினருக்குப் பல கேள்விகள் உள்ளன என்பதும் இப்போது பல சவால்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர் என்பதும் எங்களுக்குத் தெரியும், அத்துடன் எமது பணியாளார்கள் இயன்றளவு ஆதரவாக இருக்க விரும்புகின்றனர். இதனால், கல்வி பயிற்றுநர்கள் கூகுள் வகுப்பறை அல்லது Brightspace போன்ற மென்பொருள் தளம் அல்லது மின்னஞ்சல் மூலம், தொலைபேசி அல்லது நேரடிக் கடிதம் போன்ற பல்வேறு வழிகளில் குடும்பத்தினருடன் இணைந்துகொள்கின்றனர்.

இந்தச் செயல்முறையூடாகக் கடந்த இரண்டு வாரங்களாக நாங்கள் பணியாற்றியபோது மாணவர்கள், குடும்பத்தினர் மற்றும் பணியாளார்களிடமிருந்து பெறுமதிமிக்க பின்னூட்டல்கள் எங்களுக்குக் கிடைத்துள்ளன. கிடைக்கப்பெற்ற ஆலோசனைகள் மற்றும் கரிசனைகள் பரந்தளவு வேறுபடுகின்றன. இதற்கு நாங்கள் பதிலளிப்பதற்கு உதவுவதற்கென, நாங்கள் முன்னோக்கிச் செல்லும்போது எங்களுடைய பணியில் உதவுவதற்கென்று எங்களிடம் ஐந்து கோட்பாடுகள்உள்ளன:

1. ஒவ்வொருவரினதும் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு முன்னுரிமை வழங்குதல்
2. பல்வேறு வழிகளில் கல்வியைத் தொடர்வதில் கவனம் செலுத்துதல்
3. ஒவ்வொருவருடனும் உறவுகளையும் தொடர்பையும் பேணுதல்
4. அனைத்து மாணவர்களையும், முக்கியமாகக் குறைந்தளவு சேவை வழங்கப்பட்டது என்ற வரலாறு கொண்டவர்களையும் பல்வேறு காரணங்களுக்காகத் தொலைதூரக்

கல்வியில் வினைத்திறனுடன் பங்குபற்ற முடியாமலிருக்கக்கூடியவர்களையும் இணைத்துக்கொள்ளுதல்

5. இந்தத் தொலைதூரத் தளத்தில், பணியாளர்களுடைய ஆற்றலை வினைத்திறனுடையதாகக் கட்டியெழுப்புதுதல்

தொலைதூரத்தில் வீட்டிலிருந்து பாதுகாப்பாகக் கல்வியைத் தொடர்வதற்கு மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்குவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் என்பதைத் தயவுசெய்து அறிந்துகொள்ளுங்கள். இந்தத் தொலைதூரக் கல்விச் சூழலில் இயன்றவரை மிகவும் வினைத்திறனான வழிகளில் உங்கள் பிள்ளைகளுக்கு சேவையாற்றுவதற்காக அக்கறை செலுத்தும் எங்களது பணியாளர்களுக்கும் நாங்கள் ஆதரவளிக்கின்றோம். எப்போதும்போல, இந்தப் பாதையில் மிக அண்மித்த தகவல்களை உங்களுக்கு நாங்கள் தொடர்ந்து அறியத் தருவோம். பின்வருவன பற்றிய தகவல்களைக் கீழே காண்பீர்கள்:

- மாணவர்களுக்கான இணையப் பாதுகாப்பு
- கருவிகள் விநியோகம்
- களப் பயணங்கள், பட்டமளிப்பு மற்றும் ஏனைய நிகழ்வுகள்
- கேள்விகள் அல்லது கரிசனைகள் தொடர்பாகப் பணியாளர்களைத் தொடர்புகொள்ளுதல்
- இணையக் கற்கைத் தளங்கள்
- மாணவர் மதிப்பீடு
- மனநல வளங்கள்

## மாணவர்களுக்கான இணையப் பாதுகாப்பு

பல மாணவர்கள் அதிகளவு நேரத்தை இணையத்தில் செலவிடும் இந்த வேளையில், இணையப் பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவது மிகவும் முக்கியமாகும். கல்வி கற்பதற்கும் தொடர்பில் இருப்பதற்கும் இணையம் எமது சமூகங்களுக்குப் பல வாய்ப்புக்களைக் கொடுக்கின்றது. எனினும், இது பதின்மவயதினரை இணையம் மூலமான அடாவடித்தனம், சமூக ஊடகங்களைத் தவறான வழியில் பயன்படுத்துதல், அந்தரங்கப் பிரச்சினைகள் மற்றும் பல இடர்களுக்குள்ளும் விட்டுவிடலாம். இணையப் பாதுகாப்பு பற்றிய உங்களுடைய குடும்பத்தினருடனான கலந்துரையாடல்களுக்கு உதவுவதற்குரிய தகவல்களைக் கீழே காண்பீர்கள். நாங்கள் - பெற்றோர்/பாதுகாவலர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி பயிற்றுநர்கள் - இணைந்து பணியாற்றினால், இணையவழி இடர்களிலிருந்து எமது மாணவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவ முடியும்.

இதோ, பெற்றோர்/பாதுகாவலர்கள் மற்றும் மாணவர்களுக்கான முக்கிய இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் சில:

- மாணவர்கள் அவர்களுடைய தொலைபேசி இலக்கம், முகவரி, சமூகக் காப்புறுதி இலக்கம், பிறந்த திகதி, தனிப்பட்ட நிழலுருவங்கள் அல்லது நிதி தொடர்பான தகவல்களை வயது வந்தோரது அனுமதியின்றி ஒருபோதும் இணையத்தில் பகிர்ந்துகொள்ளக்கூடாது.
- அவர்களுடைய தனிப்பட்ட பாதுகாப்பு பற்றிக் கரிசனைக்குட்படுத்தும் ஒரு செய்தி, விமர்சனம், நிழலுருவம் அல்லது வேறு எதனையும் மாணவர்கள் இணையத்தில் கண்டால், அதை வயது வந்த ஒருவரது கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவரவேண்டும்; அத்துடன்
- உங்களுடைய பிள்ளை பயன்படுத்தும் இணையதளங்கள், வீடியோ விளையாட்டுகள் மற்றும் பயன்பாடுகள் பொருத்தமானவை என்பதையும் பாதுகாப்பான முறையில் அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்  உறுதிப்படுத்தும் பொருட்டு பெற்றோர்/பாதுகாவலர்கள் அவற்றை அறிந்திருக்கவும் கண்காணிக்கவும் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு,  தயவுசெய்து TDSB Online Safety web page  க்கு வருகை தாருங்கள்.

## இணையக் கற்கைத் தளங்கள் மற்றும் இணையதள கலந்துரையாடல்

மாணவர்களை தொலைதூரத்தில் இணைக்கும் பொருட்டு இணையக் கற்கைத் தளங்கள் மற்றும் இணையதளக் கலந்துரையாடலுக்கான தெரிவுகளை TDSB கல்வி பயிற்றுநர்களுக்கு வழங்குகின்றது. மாணவர்கள் மற்றும் குடும்பத்தினரை அவர்களது சொந்த அறிவு மற்றும் சௌகரிய நிலை அத்துடன் மாணவர்களதும் குடும்பத்தினரதும் சூழ்நிலைகளின் அடிப்படையில் எந்தத் தளத்தைப் (தளங்களைப்)  பயன்படுத்துவது மற்றும் மாணவர்களையும் குடும்பத்தினரையும் எவ்வாறு மிகச் சிறப்பாக ஈடுபடுத்தலாம் என்பது ஒவ்வொரு கல்வி பயிற்றுநருடைய தீர்மானமுமாகும்.  தொலைதூரக் கல்வி என்பது ஒவ்வொரு வகுப்புக்கும் வித்தியாசமானது என்பதையும், ஆசிரியருடைய தொழில்முறை மதிப்பீட்டின் அடிப்படையில் இருக்குமென்பதையும் மாணவர்களும் குடும்பத்தினரும் முக்கியமாக நினைவில் வைத்திருக்கவேண்டும்.

கல்வி பயிற்றுநர்கள் வீடியோ கலந்துரையாடல் முறையைத் தாராளமாகப் பயன்படுத்தலாம், ஆனால் அவ்வாறு செய்யவேண்டும் என்ற தேவை இல்லை. அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்துவதே எங்களுடைய பொதுவான குறிக்கோளாகும். இது பல வித்தியாசமான வழிகளிலும் வித்தியாசமான உத்திகள் மற்றும் இணையக் கருவிகளைப் பயன்படுத்தியும் செயற்படுத்தப்படும். மாணவர்கள் கற்கைச் செயற்பாடுகள் மற்றும் வளங்களை அணுகக்கூடியதாக இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கும், மாணவர்களுடைய நல்வாழ்வு பற்றிக் கவனித்துக் கொள்வதற்கும், மாணவர்களுக்குப் பின்னூட்டல்களை வழங்குவதற்கென்று வழமையாக அவர்களுடைய மாணவர்கள் அனைவரையும் ஈடுபடுத்தும் விதிமுறை ஒன்று ஆசிரியர்கள் மற்றும் பாலர் வகுப்பின் நியமிக்கப்பட்ட ஆரம்ப இளம்பருவ கல்வி பயிற்றுநர்களிடம்  இருக்கும் என்பது எங்களுடைய எதிர்பார்ப்பாகும்.

குடும்பங்களிலுள்ள விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்கள் அல்லது ஆங்கில மொழி கற்பவர்களின் தனித்துவமான கற்றல் தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்கு குறிப்பிட்ட கவனம் தேவைப்படலாம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். TDSB இல் இருக்கும் எமது பன்முக கல்வி பயில்வோருக்கு ஆதரவு வழங்குவது எங்களுடைய முன்னுரிமையாகும். ஒன்ராறியோ அல்லது மாற்றுப் பாடத்திட்டத்தை அணுகும் விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்கள் அல்லது ஆங்கில மொழி கற்பவர்களுக்கென IEPஇல் விபரிக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட பலம் மற்றும் தேவைகளின் அடிப்படையில் மாணவர் செயற்திட்டத்தை ஒவ்வொருவருக்குமென அமைப்பதற்காக ஆசிரியர்கள் மற்றும் ESL/ELL பணியாளர்கள் ஏனைய பாடசாலை ஊழியர்களுடன் தொடர்ந்து ஒன்றிணைகின்றனர். கல்வி கற்பதற்கு ஆதரவளிப்பதற்காக வளங்கள் மற்றும் துணைக் கருவிகளை அணுகும்பொருட்டு விசேட கல்வி ஆதாரவளங்கள் அல்லது ESL ஆதாரவளங்கள் பக்கத்திற்கு வருகைதருமாறு குடும்பங்களை நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

## மாணவர்களுக்கு உபகரணங்களை விநியோகித்தல்

தொலைதூரக் கல்வியை அணுகுவதற்காக உபகரணம் ஒன்று தேவைப்படும் மாணவர்களுக்கு ஆதரவு வழங்குவதற்காக, மாணவர்களுக்கு உபகரணங்ளைக் கடனாகக் கொடுப்பதற்கு நாங்கள் ஒழுங்குகள் செய்துள்ளோம். பெரிய எண்ணிக்கையிலான கோரிக்கைகள் – ஏறக்குறைய 29,000 குடும்பங்களுக்கு உபகரணங்கள் தேவைப்படுகின்றன – இதை உங்களால் கற்பனைசெய்து பார்க்க முடியும் – ஆனால் இயன்றவரை விரைவாக இந்த உபகரணங்களைத் தயார்படுத்தி விநியோகம் செய்வதற்காக எமது பணியாளர்கள் இரவு பகலாகப் பணியாற்றுகின்றனர். குடும்பத்தினர் வீட்டில் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்தும்பொருட்டு அந்த உபகரணங்களை எங்களுடைய மாணவர்களுடைய வீட்டிற்கு விநியோகம் செய்வதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். இந்தத் தெரிவுக்கு அதிக நேரம் எடுக்கும், ஆனால் எங்கள் சமூகங்களது பாதுகாப்புத்தான் எங்களுடைய முன்னுரிமையாகும். உங்களுடைய பிள்ளைக்கு உபகரணம் ஒன்று கிடைத்தால், அந்தக் குடும்பத்தினருக்கு தொழில் நுட்பப் பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் ஆதரவளிப்போம். உபகரண விநியோகத்துடன் இந்தத் தகவல்களை நாங்கள் உள்ளடக்குவோம். உபகரணங்களில் ஏற்படும் பிரச்சனைகளை அறிவிப்பதற்காக மாணவர்கள் அவர்களுடைய ஆசிரியர்களுடனும் தொடர்புகொள்ளலாம்.

தொலை தூரக்கல்விக்கு ஆதரவளிப்பதற்காக விசேட கல்வித் தொகை (SEA) உபகரணத்தை விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்கள் அணுகுகின்றனர் என்பதையும் நாங்கள் உறுதிப்படுத்த விரும்புகிறோம். Chromebooks அல்லது குறிப்பிடப்பட்ட அத்துடன் விசேடமாக்கப்பட்ட உபகரணம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக குடும்பபங்களும் மாணவர்களும் விசேட கல்வி SEA அணி, OT/PT அணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியுடன் (IT) இணைந்து செயற்படுவார்கள்.

**மாணவர் மதிப்பீடு**

இந்தத் தகவல்கள் முன்னர் உங்களுடன் பகிரப்பட்டுள்ளன என்பது எனக்குத் தெரியும், எனினும் தொலைதூரக் கல்விக்கான மதிப்பீட்டு செயல்முறையை நீங்களும் உங்களுடைய பிள்ளையும் புரிந்து கொள்கின்றீர்கள் என்பது முக்கியமாகும்.

**ஆரம்பநிலை மாணவர்களுக்காக,** மாணவர்கள் கல்வி கற்பது பற்றிய சான்றுகளைச் சேகரிப்பதற்கான அணுகுமுறைகளை ஆசிரியர்கள் பயன்படுத்துவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆசிரியர்கள் அர்த்தமுள்ள பின்னூட்டல்களை வழங்குவார்கள். ஒரு பாடத்துக்கான இறுதித் தராதரம் வழங்கப்படும்போது, மூடிய காலப்பகுதியில், கல்வி கற்றலில் ஏற்பட்ட குறிப்பிட்ட முன்னேற்றத்திற்கான சான்று ஆசிரியரால் கவனத்திலெடுக்கப்படலாம். அல்லாவிட்டால், தரம்1 முதல் தரம் 8 வரையான  மாணவர்களுக்கான தராதரம், பாடசாலை மார்ச் 13, 2020 வரை மூடப்பட்டிருக்கையில்  அவர்கள் கல்வி கற்றலில் பெற்றுக்கொண்ட மதிப்பெண்களின் அடிப்படையில் வழங்கப்படும்.  பாலர் வகுப்பு முதல் தரம் 8 வரை அனைத்து மாணவர்களுக்கும் ஜூன் மாத முன்னேற்ற அறிக்கைப் பத்திரம் ஒன்று வழங்கப்படும்.

**தரம் 12  மாணவர்களுக்கு** மட்டும், ஒன்ராறியோ பல்கலைக்கழக விண்ணப்ப மையம் (OUAC) மற்றும் ஒன்ராறியோ கல்லூரி விண்ணப்ப மையத்திற்கு (OCAS) தரச்சான்றுகளை வழங்குவதற்கான காலக்கெடுவைப் பூர்த்தி செய்வதற்காக, ஏப்ரல் 27 அளவில் இடைக்கால மதிப்பெண்கள் பதிவுசெய்யப்படும்.  மதிப்பெண்கள் மார்ச் 13, 2020 வரை செய்யப்பட்ட பாடவேலைகளுக்காக (பருவகாலப் பாடசாலைகளுக்கு, அந்த பருவகாலத் தொடக்கத்திலிருந்து, அல்லது பருவகாலம் அற்ற பாடசாலைகளுக்கு கடைசி மாகாண முன்னேற்ற அறிக்கையிலிருந்து) கொடுக்கப்படும்.  ஆனால், மார்ச் 13 க்கு முன்னர் கொடுக்கவேண்டிய பாடவேலைகளை ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடும், அத்துடன் மாணவர்கள் தாம் கற்றதைக் காட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு,  ஏப்ரல் 6க்குப் பின்னர் மேலதிக பாடவேலை ஒன்றை அவர்கள் கொடுக்கக்கூடும். அவர்களுடைய மார்ச் 13 நடுத் தவணை மதிப்பெண்ணை இது மேம்படுத்துமென்றால் மட்டும் இந்தப் பாடவேலைகள் கருத்திலெடுக்கப்படும்.

**இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்களுக்கு,** தொலைதூரக் கல்வி கற்கும்போது ஆசிரியர்கள் பாடவேலைகள், செயற்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட நோக்கத்திற்கான முக்கிய செயற்பாடுகளை ஒதுக்குவதுடன் பின்னூட்டத்தையும் வழங்குவார்கள்; எனினும் மாணவருடைய மதிப்பெண்ணை இது மேம்படுத்தும் என்றால் மட்டுமே இது கருத்திலெடுக்கப்படும். இல்லையெனில், ஜூன் இல் சமர்ப்பிக்கப்படும் இறுதி மதிப்பெண்கள் மார்ச் 13, 2020 வரை பூர்த்திசெய்யப்பட்ட வேலையைப் பிரதிபலிக்கும்.

தொலைதூரக் கல்வி கற்கும்போது கற்றலில் ஏற்படும் இடைவெளிகளைப் பற்றி குடும்பத்தினர் கரிசனை கொள்ளக்கூடும் என்பது எங்களுக்கு விளங்கும். பாடசாலை மூடப்படும் காலம் முடிவடைந்து அடுத்த இலையுதிர் காலம் தொடங்கும்போது ஒவ்வொரு மாணவரதும் கற்கைத் தேவைகளைப் புரிந்துகொள்ளும் பொருட்டு நாங்கள் நன்கு திட்டமிட்டுச் செயற்படுவதுடன் தேவைப்படும்போது பொருத்தமான இடையீட்டை வழங்குவோம்.

அனைத்து மாணவர்களும் இணையம் அல்லது அச்சு வளங்கள் ஊடாக கற்கையை அணுகக்கூடியதாக இருக்கவேண்டும். அடுத்த சில மாதங்களில் மதிப்பெண் பற்றி நாங்கள் எவ்வாறு செயற்படுகின்றோம் என்பதைப் பொறுத்து சில மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு ஊக்கமளிக்கப்படாதிருக்கலாம், ஆனால் முடிந்தவரை மாணவர்கள் தங்கள் கற்றலில் ஈடுபாட்டுடன் இருக்குமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். வழமையான வகுப்பறை அமைப்பு மற்றும் பாடசாலைச் சூழலுக்கு நாங்கள் திரும்பக்கூடியதாக இருக்கும்போது, இது மாணவர்களுக்கு உதவும். வீட்டிலிருந்து தொடர்ந்து கற்பதில் பங்குகொள்ள முடியவில்லை என ஒரு மாணவர் உணர்ந்தாலும் கூட, அவர்களைப் பாடசாலையுடன் இணைந்திருக்குமாறும் அவர்களுடைய ஆசிரியருடன் தொடர்பில் இருக்குமாறும் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

## களப் பயணங்கள், பட்டமளிப்பு மற்றும் ஏனைய நிகழ்வுகள்

நடைபெற இருக்கும் களப் பயணங்கள், பட்டமளிப்பு விழாக்கள், பாடசாலை ஆண்டிறுதி நிகழ்வுகள் மற்றும் பல செயற்பாடுகள் பற்றி எங்களிடம் பல கேள்விகள் இருந்தன. எதிர்வரும் வாரங்களின் நிச்சயமற்ற தன்மையை கருத்தில்கொண்டு, எஞ்சிய பாடசாலை ஆண்டுப் பகுதியில் அனைத்துக் களப் பயணங்கள் மற்றும் இரவு தங்கியிருக்கும் பயணங்களையும் இரத்துச் செய்வதென்ற கடினமான முடிவை நாங்கள் எடுக்கவேண்டியிருந்தது. பட்டமளிப்பு விழாக்கள் மற்றும் பாடசாலை ஆண்டிறுதி நிகழ்வுகள் போன்ற, ஏனைய அனைத்து செயற்பாடுகள் தொடர்பாக இந்த விபரங்களை மிக விரைவில் உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

## மன நலம் மற்றும் ஆதாரவளங்கள்

குடும்பங்களுக்கு இது ஒரு சவாலான நேரம் என்பதும் மன நலம் மற்றும் நல்வாழ்வை, தனிமைப்படுத்தல் பாதிக்கலாம் என்பதும் எங்களுக்குப் புரிகின்றது. தேவையேற்பட்டால், எங்களுடைய மனநலம் மற்றும் நல்வாழ்வு என்ற இணையப் பக்கத்திலுள்ள சுய-உதவி மற்றும் சேவை வழங்குநர்கள் பற்றிய பெறுமதிமிக்க தகவல்களைத் தயவுசெய்து அணுகுங்கள். எங்களுடைய சமூகங்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதுகாப்பாக இருப்பதற்கு உதவும்பொருட்டு நாங்கள் ஒன்றாகச் செயற்படுவது முக்கியமாகும்.

Toronto District School Board

## எங்கள் குடும்பங்களுக்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம்

உங்களுடைய பங்காண்மையையும் பொறுமையையும் நான் எவ்வளவு பாராட்டுகின்றேன் என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். உங்களுடைய பிள்ளையின் கல்வி மற்றும் ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபையில் உள்ள அனைத்து மாணவர்களுடைய கல்விக்கும் தொடரும் உங்கள் ஆதரவுக்கும் அர்ப்பணிப்பிற்கும் உங்களுக்கு நன்றி. இந்தப் பாதை வழியே மேடு பள்ளங்களும் மாற்றியமைத்தல்களும் இருக்கும் என்பது எங்களுக்குத் தெரியும், ஆனால் ஒன்றிணைந்து நாங்கள் இந்தச் சவால்களை வென்றுவிடுவோம். இப்போது மிகவும் முக்கியமானது என்னவென்றால், கடினமான இந்த நேரத்தில் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் பாதுகாப்பாக இருப்பதே.

உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், தயவுசெய்து உங்களுடைய பிள்ளையின் ஆசிரியருக்கு நேரடியாக மின்னஞ்சல் செய்யுங்கள். மேலதிக உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து பாடசாலை அதிபரைத் தொடர்பு கொள்ளுங்கள். பாடசாலை சார்ந்த கேள்வியொன்று உங்களிடம் இருகின்றது, ஆனால் மின்னஞ்சலுக்கு அணுகல் இல்லாவிட்டால், உங்களுடைய பாடசாலையைத் தொலைபேசியில் அழைத்து ஒரு செய்தியை விட்டுவிடுங்கள். இயன்றளவு விரைவில் யாராவது ஒருவர் உங்களுடைய அழைப்புக்குப் பதில்தரத் திரும்ப அழைப்பார். அமைப்புமுறை சார்ந்த கேள்வியொன்று உங்களிடம் இருந்தால், தயவுசெய்து உங்களுடைய கண்காணிப்பாளருக்கு மின்னஞ்சல் செய்யுங்கள். உங்களிடம் மின்னஞ்சலுக்கு அணுகல் இல்லாவிட்டால், தயவுசெய்து உங்களுடைய கண்காணிப்பாளரது அலுவலகத்தை தொலைபேசியில் அழைத்துஒரு செய்தியை விட்டுவிடுங்கள். இயன்றளவு விரைவில் யாராவது ஒருவர் உங்களுடைய அழைப்புக்குப் பதில்தரத் திரும்ப அழைப்பார். உங்களுடைய பாடசாலையுடனான தொடர்புத் தகவல்களுக்கு, தயவுசெய்து Find Your School இணையதள பக்கத்திற்கு வருகை தாருங்கள். எப்போதும்போல, அண்மித்த தகவல்களுக்காக, தயவுசெய்து TDSB website க்கு வருகை தாருங்கள்.

மீண்டும், தயவுசெய்து உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் கவனித்துக்கொள்ளுங்கள்.

உண்மையுள்ள,

John Malloy
Director of Education

(கல்வி அதிகாரி)